




சென்னை தெற்கு மாவட்ட இந்தியா கூட்டணி சார்பில் எஸ்.ஐ.ஆர்.ஐ கண்டித்து சைதாப்பேட்டையில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சி தமிழ்மாநிலத் தலைவர் கு.செல்வப்பெருந்தகை எம்.எல்.ஏ., திராவிடர் கழகத் துணைத் தலைவர் கவிஞர் கலிபூங்குன்றன், விவசாயிகள் – தொழிலாளர் கட்சித் தலைவர் பொன்குமார், மனிதநேய மக்கள் கட்சி அபுபக்கர், தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி., கனிமொழி என்.வி.என்.சோமு எம்.பி., காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ., எஸ்.அரவிந்த் ரமேஷ் எம்.எல்.ஏ., ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா எம்.எல்.ஏ., அசன் மௌலானா எம்.எம்.ஏ. கவிஞர் காசிமுத்துமாணிக்கம் உள்ளிட்ட கூட்டணிக் கட்சிகளின் நிர்வாகிகள் பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.

### இந்தியாவிலேயே S.I.R. ஐ ஆதரித்து வழக்குத் தாக்கல் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க.தான்!

# வழக்குப் போட்டு ராஜ விசுவாசத்தைக் காட்டுவது வெட்கக்கேடு!

## எடப்பாடிக்கு அமைச்சர் எஸ்.ரகுபதி கண்டனம்!

**சென்னை, நவ.12-**

**“வாக்குரிமையைப் பறிப்பதற்குத் துணை போகும் சதியில் எடப்பாடி பழனிசாமியும் ஒரு பார்ட்னர்! இந்தியாவிலேயே SIR ஐ ஆதரித்து வழக்கு தாக்கல் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க.தான் எடப்பாடி வழக்குப் போட்டு ராஜ விசுவாசத்தைக் காட்டுவது வெட்கக்கேடு!” என்று இயற்கை வளங்கள் துறை அமைச்சர் ரகுபதி அவர்கள் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.**

இதுகுறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

சரியான வாக்காளர் பட்டியலுடன் முறைகேடுகள் இல்லாத தேர்தலை நடத்தவும், அதற்காக வாக்காளர் பட்டியலில் திருத்தம் மேற்கொள்ள வேண்டும் என்பதிலும் தி.மு.க.வுக்கு எப்போதுமே மாற்றுக் கருத்து இல்லை. ஆனால், தமிழ்நாட்டில் சட்டப்பேரவைத் தேர்தலுக்குச் சில மாதங்களே உள்ள நிலையில், போதுமான கால அவகாசம் தராமல், அவசர அவசரமாக SIR பணியைத் தேர்தல் ஆணையம் மேற்கொள்வதில் உள் நோக்கம் இருக்கிறது என்பதாலேயே திமுக எதிர்க்கிறது.

**பா.ஜ.க.வின் கிளைக் கழகம் அ.தி.மு.க.!**

பா.ஜ.க.வுக்கு எதிரான வாக்காளர்களை நீக்கம் செய்யும் சதியைத் தடுக்கவும், தமிழ்நாட்டு மக்களின் வாக்குரிமையைப் பாதுகாக்கவும், SIRக்கு எதிராக அனைத்து மாவட்டத் தலைநகரங்களிலும் கண்டன ஆர்ப்பாட்டங்களைக் கூட்டணிக் கட்சிகளுடன் இணைந்து நடத்தியிருக்கிறது திமுக. அனைத்துக் கட்சிக் கூட்டம் நடத்தி, ஜனநாயகத்தின் அடிப்படையான வாக்குரிமையைப் பறிக்கும் SIR ஐ எதிர்த்து உச்ச நீதிமன்றத்தில் தி.மு.க. வழக்கு தொடர்ந்துள்ளது.

ஆரியம், திராவிடம் பற்றிக் கேட்டால், “அதற்கெல்லாம் புராணம் படிக்க வேண்டும். ஆய்வு செய்ய வேண்டும்” எனச் சொன்ன பழனிசாமிக்கு, ஜனநாயகம் பற்றி மட்டும் தெரிந்துவிடுமா? ஜனநாயகத்தின் மீது கொஞ்சமும் அக்கறை இல்லாத அதிமுக, தமிழர்களின் வாக்குரிமையைப் பற்றியா கவலைப்படும்? தமிழர்களின் வாக்குரிமை காப்பாற்றப்பட வேண்டும் எனத் தெருவில் இறங்கி ஆர்ப்பாட்டம் நடத்துவது தொடங்கி, உச்ச நீதிமன்றத்தின் கதவைத் தட்டுவது வரை



தி.மு.க. போராடிக் கொண்டிருக்கிறது. ஆனால், அ.தி.மு.க.வோ SIRஐ ஆதரித்து வழக்கு தொடர்ந்திருக்கிறது.

‘உங்க ஓட்டு உங்களுக்கு இல்லை’ எனச் சொல்லி வாக்குரிமையைப் பறிப்பதற்குத் துணை போகும் சதியில் எடப்பாடி பழனிசாமியும் ஒரு பார்ட்னர். பா.ஜ.க. கூட SIRஐ ஆதரித்து வழக்கு போடாத நிலையில், பா.ஜ.க.வின் கிளைக் கழகமாகவே செயல்படும் அ.தி.மு.க.வும் அதன் ‘சிறந்த அடிமை’யான பழனிசாமியும் நீதிமன்றம் வரை சென்றிருக்கிறார்கள். “இந்தியாவிலேயே கார் வைத்திருக்கும் கரகாட்டக் கோஷ்டி நாம் தான்” என்ற காமெடி போல, இந்தியாவிலேயே SIR ஐ ஆதரித்து வழக்கு தாக்கல் செய்த ஒரே கட்சி அ.தி.மு.க.தான் என்ற வரலாற்றை எழுதிக் கொண்டிருக்கிறார் பழனிசாமி.

**துரோகம் செய்வதில் முனைவர் பட்டம்பெற்ற பழனிசாமி!**

தேர்தலில் தோற்றுவிடுவோம் என்ற உண்மை தெரிந்துவிட்டதால், SIR மூலம் வெற்றி பெற்றுவிடலாம் என பாஜகவை நம்பி, சித்து விளையாட்டில் இறங்கியிருக்கிறார் துரோகம் செய்வதில் முனைவர் பட்டம் பெற்ற பழனிசாமி. கூவத்தூரில் ’ஊர்ந்தெடுக்கப்பட்டு’ முதல்வர் ஆனது போல, SIR மூலம் கொல்லைப்புற முதலமைச்சராகத் துடிக்கிறார். பாஜகவின் வாக்கு திருட்டு வியூகம் அதிமுகவுக்குப் பயன்படும் என்ற நப்பாசையில் SIRஐ ஆதரிக்கிறார் பழனிசாமி.

முஸ்லிம்களைப் பாதிக்கும் வகையில் மோடி அரசு கொண்டு வந்த CAA சட்டத்தை ஆதரித்துவிட்டு, “முஸ்லிம்களுக்கு எந்தப் பாதிப்பும் இல்லை” எனப் பச்சைப் பொய் சொன்ன பழனிசாமி தான், அந்த CAA சட்டத்தை SIR வழியாக அமல்படுத்தத் துடிக்கும் பாஜகவுக்குத் துணை போகிறார். SIR நடவடிக்கையால் தமிழர்களின் வாக்குரிமைக்கு மட்டுமல்ல; அவர்களின் குடியுரிமைக்கே ஆபத்து ஏற்படலாம் என்கிற பேராபத்து சூழ்ந்திருக்கிறது.

வேளாண் சட்டம், உதய் மின் திட்டம், மதுரை அரிட்டாப்பட்டி டங்ஸ்டன் சுரங்கப் பிரச்சினைக்கு காரணமான MINES AND MINERALS திருத்தச் சட்டம், குடியுரிமை திருத்த சட்டம் உள்ளிட்ட பாஜக ஒன்றிய அரசு கொண்டு வந்த சட்டங்களையும் திட்டங்களைக் கண்களை மூடி ஆதரித்து, சிறந்த அடிமையாக விளங்கி வரும் எடப்பாடி பழனிசாமி, தற்போது SIRலும் ‘ஆலம்பனா நான் உங்கள் அடிமை’ என முன்னுக்கு வந்து நிற்கிறார்.

பீகாரில் SIR பணி நடைபெற்ற போது, பாஜகவின் கூட்டணியில் இடம் பெற்ற ஐக்கிய ஜனதா தளம் வழக்கு தாக்கல் செய்யவில்லை. பாஜக கூட்டணியில் இடம்பெற்ற ஆந்திர மாநிலத்தின் தெலுங்கு தேசம் கட்சி SIR நடவடிக்கையை ஆதரித்து வழக்கு போடவில்லை. மாறாக, இஸ்லாமியர்களின் குடியுரிமையைச் சோதிக்கும் வகையில் SIR நடவடிக்கையைத் தேர்தல் ஆணையம் பயன்படுத்தக் கூடாது என்று கவலை தெரிவித்துள்ளது. ஆனால், ‘அடிமை சேவை செய்வதே என் தவ வாழ்க்கை’ என வாழ்ந்து கொண்டிருக்கும் பழனிசாமி, SIRஐ ஆதரித்தோடு வழக்கு போட்டு ராஜ விஸ்வாசத்தைக் காட்டுவது வெட்கக்கேடு.

மக்களைப் பற்றியும் மக்கள் நலனைப் பற்றியும் துளியும் கவலையில்லாமல் டெல்லி எஜமானர்களின் மனம் குளிர மட்டுமே அடிமை சேவகம் செய்து வரும் பழனிசாமி தனது கட்சியை அடமானம் வைத்தது மட்டுமின்றி, தமிழர்களின் வாக்குரி மையைப் பறித்து தமிழ்நாட்டை டெல்லியின் அடிமையாக்க முயல்கிறார். இந்த அற்ப செயலுக்குத் தமிழ்நாட்டு மக்கள் தக்க பதிலடி அளிப்பார்கள்.

இவ்வாறு அமைச்சர் எஸ்.ரகுபதி அவர்கள் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வை (S.I.R) எதிர்த்து கண்டன ஆர்ப்பாட்டம்!

# செங்கல்பட்டில் 12 ஆயிரம் பேர் பங்கேற்று கண்டன முழக்கம் !

## மனித நேய மக்கள் கட்சி தலைவர் எம்.எச்.ஜவாஹிருல்லா கண்டன உரை!

**செங்கல்பட்டு, நவ. 12 -**

**செங்கல்பட்டில் ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக செயல்படும் இந்திய தேர்தல் ஆணையத்தைக் கண்டித்து, வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர சீராய்வை (S.I.R) எதிர்த்து காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் 12 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மதசார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியினர் அணிதிரண்டு பங்கேற்று கண்டன முழக்கமிட்டனர்.**

தமிழ்நாட்டில் சிறப்பு தீவிர வாக்காளர் பட்டியல் (S.I.R) சீராய்வை தேர்தல் ஆணையம் கைவிடக்கோரியும், ஒன்றிய பா.ஜ.க அரசின் கைப்பாவையாக மாறி எதேச்சாதிகாரப் போக்குடன் தேர்தல் ஆணையம் தமிழ்நாட்டில் (S.I.R) செயல்படுத்துவதைக் கண்டித்தும்,

காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சிகளின் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் அருகில் தி.மு.க தீர்மானக் குழுச் செயலாளர் மீ.அ.வைதியலிங்கம் தலைமையில் நடைபெற்றது.

செங்கல்பட்டு தெற்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் ஆர்.சுந்தரமூர்த்தி தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்றார்.

மாவட்ட காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் ஆர்.எஸ். செந்தில்குமார், கே.வி. திலகர், எஸ்.ஜெ.நிக்கோலஸ், மாவட்ட ம.தி.மு.க செயலாளர்கள் மா.வை மகேந்திரன்,



பூ.லோகநாதன், பரத்ராஜேந்திரன், மாவட்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர், ப.சு.பாரதி, மாவட்ட இந்திய கம்யூனிஸ்ட் கட்சி செயலாளர்கள் ஏ. ராஜ்குமார், பா.கார்த்திக்,

மவாட்ட முஸ்லீம் வீக் தலைவர்கள், முகம்மது பேக். ஷேக்தாவூத், சைதை ம.ஜேக்கப், ப.சாமுவேல் எபினேசர், திருநீர்மலை தமிழரசன், கு. தென்னவன், மேனகாதேவி கோமகன், எஸ்.கே.ஜாகிர் உசேன், ஏ.எஸ்.முகம்மது ரவி, செங்கல்பட்டு மாவட்ட திராவிடர் கழகத் தலைவர் செம்பியன், ஆம் ஆத்மி மாவட்டச் செயலாளர், ராஜ்குமார், மாவட்ட திராவிடர் இயக்க தமிழ்ப் பேரவை செயலாளர் ஏ.அன்பு உள்ளிட்ட கூட்டணித் தலைவர்கள் முன்னிலை வகித்தனர்.

இம்மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை முடித்து வைத்து மனித நேய மக்கள் கட்சி மாநிலத் தலைவர் எம். எச்.ஜவாஹிருல்லா, இந்திய கம்யூனிஸ்ட் மாநில செயற்குழு உறுப்பினர் ஜி.ஆர்.ரவிந்திரநாத் ஆகியோர் கண்டன உரையாற்றினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் இ.கருணாநிதி, எஸ்.ஆர். ராஜா, வரலட்சுமி மதுசூதன், எஸ்.பாலாஜி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் க.பீம்ராவ், மனித நேய மக்கள் கட்சி மாநில துணைச் செயலாளர் எம். யாக்கூப், மனித நேய மக்கள் கட்சி மாநில பிரதிநிதி எஸ்.எம்.ஷாஜகான், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில கட்டுப்பாட்டுக் குழு உறுப்பினர் இ. சங்கர், திராவிட இயக்க தமிழர் பேரவை துணைச் செயலாளர் இ. இளமாறன்,

மாவட்ட தி.மு.க துணைச் செயலாளர் து. மூர்த்தி, மாவட்ட பொருளாளர் வெ. விசுவநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் க.அன்புச்செல்வன், ஜி.சி. அன்புச் செழியன், ஆதிமாறன்,

காஞ்சிபுரம் மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் படப்பை ஆ. மனோகரன், தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமார், துணை மேயர் கோ.காமராஜ், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள், வீ.தமிழ்மணி, எல். இதயவர்மன், கழக தொழில்நுட்ப மாநில துணைச் செயலாளர் அ.தமிழ்மாறன்,

ஒன்றிய தி.மு.க செயலாளர்கள் எஸ்.டி.கருணாநிதி, ந.கோபால், பையனூர் சேகர், ஏ.வந்தேமாதரம், பி. சந்தானம், ஜி.கே.ரவி, எம்.டி. லோகநாதன், ஏ.மணி, கே.பி.ராஜன், நகரச் செயலாளர்கள் ஜெ.சண்முகம், டி.பாபு, எஸ். ஜபருல்லா, கே.சத்தியமூர்த்தி, எம்.கே.டி. கார்த்திக், ஆர்.சதீஷ்குமார், த.வினோத்குமார்,

பகுதி செயலாளர்கள் என்.சந்திரன், ப.குணாளன், வே.கருணாநிதி, இ.ஜோசப் அண்ணாதுரை, த. ஜெயக்குமார், எஸ். சேகர், எஸ்.இந்திரன், டி. காமாராஜ், ஆ.நடராஜன், ஏ.கே.கருணாகரன், இ.எஸ். பெர்னாட், ஆர். சுரேஷ்,கழக அணிகளின் மாநில நிர்வாகிகள் சாய் ஜெயகாந்த் பாரதி, பிரதிப்,

பொதுக்குழு உறுப்பினர்கள், எம்.எஸ்.கே.இப்ராகிம், ஆர்.டி.பூபாலன், கீதா ஆனந்தன் எம்.ஆர். சீனிவாசன், ஆர்.எஸ்.சங்கர், எஸ். சதீஷ், க . தே வே ந் தி ர ன் , கே.எத்திராஜ், எம்.செல்வகுமார், மா.கணேஷ்பாபு, செ.அருள்தேவி, இரா.பாஸ்கரன், மு.ரஞ்சன், ஜிஜேந்திரன் ராமு, பேரூர் செயலாளர்கள், மு.தேவராஜ், ஜி.டி யுவராஜ், மாநகர நிர்வாகிகள் இரா. நரேஷ்கண்ணா, பொன். சதாசிவம், வ. விஜயரங்கன்,

மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கோல்டு டி.பிரகாஷ், துணை அமைப்பாளர்கள் வீ.ஜெயகுமார், ப.இராமமூர்த்தி, டி.கே.கமலக்கண்ணன், கே.மணி கண்டன், கே.ஞானகிராமன், கழக அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், எல்.பிரபு, ச.சிசிகலா, பா.ஞானப்பி ரகாசம், தி.க. பாஸ்கரன், வி. ரவிச்சந்திரன், ஜா. செந்தில் தேவராஜ், டி.பி. செந்தில்குமார்,

கே.ஆர்.ஆனந்தன், எஸ். ஆல்பர்ட், ஜான்தினகரன், பொன்.ரமேஷ்ரவி, தங்கம் வாட்ஸ், டி.எஸ் எம்.ஜெயகரன், எஸ்.கர்ணன், டி.ஆர். சாரதி பெரியநாயகம், பெப்சி கண்ணன், ஆர்.கோவிந்தன், மாநகர இளைஞர் அணி அமைப்பாளர் எஸ்.சத்தியப் பிரபு ஆகியோர் உட்பட 12,000க்கும் மேற்பட்ட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியினர் கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல் அணி திரண்டு வந்து கலந்து கொண்டு கண்டன முழக்கங்களை எழுப்பினார்கள்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தின் காரணமாக செங்கல்பட்டு நகரமே ஸ்தம்பித்தது. செங்கல்பட்டு பழைய பேருந்து நிலையம் முழுவதும் கூட்டணிக் கட்சியினர் திரண்டு வந்ததால் கூட்டம் பார்க்கக் கண்கொள்ளா காட்சியாக இருந்தது.

### விவசாய நலனுக்காக

# பயிர்க் காப்பீடு செய்யும் தேதியை நவ.30-க்கு நீட்டித்திடுக!

## முதல்வருக்கு – கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் கோரிக்கை!

சென்னை, நவ.12-

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம் தமிழ்நாடு சார்பாக மாநில பொதுச் செயலாளர் இரா.அருள்ராஜ் விடுத்துள்ள அவசர கோரிக்கை வருமாறு:-

பாரத பிரதமர் மந்திரி பயிர் காப்பீடு திட்டம் 2025 -26 நடப்பாண்டிற்கு ராபி சிறப்பு பருவத்தில் தேர்வு செய்யப்பட்டுள்ள நெல் பயிர் உள்ளிட்ட 11 பயிருக்கு காப்பீடு செய்ய நவம்பர் 15-ஆம் தேதி வரை கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது.

தீபாவளி மற்றும் ஆயுத பூஜை விடுமுறை காரணங்களாலும், தொடர் மழையின் காரணங்களாலும், கிராம நிர்வாக அலுவலர்களாகிய நாங்கள் எஸ்.ஐ.ஆர். பணியில் ஈடுபட்டு வருவதாலும் பல விவசாயிகள் பயிர் காப்பீடு செய்ய முடியாமல் சிரம ப்பட்டு வருகின்றனர்.

ஒரு நாட்டின் முதுகெலும்பானவர்கள் விவ சாயிகள். விவசாயிகள் நலனில் அக்கறை கொண்ட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் விவசாய நலனுக்காக பயிர் காப்பீடு செய்யும் தேதியை நவம்பர் 30-க்கு நீட்டிக்குமாறு கிராம நிர்வாக அலுவலர்கள் சங்கம், தமிழ்நாடு சார்பாக பணிவுடன் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### SIR எனும் சூழ்ச்சி ஆணி

